# மார்ச் - 20 - திங்கள்

## புனித சூசையப்பர்

### “அவரது வழிமரபு என்றென்றும் நிலைத்திருக்கும்” (தி.பா.89:36)

-----------------------------------------------------------------------------------------------------

**முதல் வாசகம்: 2 சாமுவேல் 7 : 4 – 5, 12 – 14.16**

அன்று இரவே ஆண்டவரின் வார்த்தை நாத்தானுக்கு அருளப்பட்டது. நீ சென்று, என் ஊழியன் தாவீதிடம் ஆண்டவர் இவ்வாறு கூறுவதாகச் சொல் உன் வாழ் நாள் நிறைவுபெற்று நீ உன் மூதாதையரோடு துயில்கொள்ளும் போது, உனக்கு பிறக்கும் உன் வழித்தோன்றலை உனக்குப் பின் நான் உயர்த்தி அவனது அரசை நான் நிலைநாட்டுவேன். எனது பெயருக்காக கோவில் கட்டவிருப்பவன் அவனே. அவனது அரசை நான் என்றும் நிலைநிறுத்துவேன். நான் அவனுக்கு தந்தையாக இருப்பேன். அவன் எனக்கு மகனாக இருப்பான். என் முன்பாக உனது குடும்பமும் உனது அரசும் என்றும் உறுதியாயிருக்கும்! உனது அரியணை என்றுமே நிலைத்திருக்கும்!

**பதில்பாடல் :** அவரது வழிமரபு என்றென்றும் நிழலத்திருக்கும்

**இரண்டாம் வாசகம் : உரோமையர் 4:13,16–18,22**

உலகமே அவருக்கு உரிமைச் சொத்தாகும் என்னும் வாக்குறுதி ஆபிரகாமுக்கோ அவருடைய வழிமரபினர்களுக்கோ திருச்சட்டத்தைக் கடைப்பிடித்ததால் கிடைக்கவில்லை நம்பிக்கை கொண்டு கடவுளுக்கு ஏற்புடையவர் ஆனதால்தான் அவ்வாக்குறுதி கிடைத்தது. ஏனெனில் திருச்சட்டத்திற்கு உட்பட்டவர் களுக்குத்தான் அந்த உரிமைச் சொத்து கிடைக்கும் எனின், நம்பிக்கை கொள்வது பொருளற்றதாகும் அந்த வாக்குறுதியும் செல்லாததாகும். திருச்சட்டம் இறைவனின் சினத்தை வருவிக்கிறது. சட்டம் இல்லையெனில் அதை மீறவும் இயலாது. ஆகவே கடவுளின் அருள்செயலால் நம்பிக்கை வாக்குறுதியின் அடிப்படையாயிற்று. இவ்வாறு வாக்குறுதி ஆபிரகாமின் வழிவந்தவர்கள் எல்லாருக்கும்-திருச்சட்டத்திற்கு உட்பட்டோருக்கு மட்டுமல்ல, அவரைப்போலக் கடவுள்மீது நம்பிக்கை கொண்டோ ருக்கும் உரியது என்பது உறுதியாயிற்று. ஆபிரகாம் நம் அனைவருக்கும் தந்தை. உன் வழிமரபினர் எண்ணற்றவராய் இருப்பர்” என்றும் அவருக்குச் சொல்லப்பட்டது. இக்கூற்று நிறைவேறும் என்னும் எதிர்நோக்குக்கு இடம் இல்லாததுபோல் தோன்றினும், அவர் எதிர்நோக்கினார் தயங்காமல் நம்பினார். ஆகவே அவர் பல மக்களினங்களுக்குத் தந்தையானார். தமக்கு ஏறத்தாழ நூறு வயது ஆகிவிட்டதால் தமது உடலும் சாராவுடைய கருப்பையும் செத்தவைபோல் ஆற்றலற்றுப் போய்விட்டதை எண்ணிப் பார்த்தபோதுகூட, அவர் நம்பிக்கையில் உறுதி தளரவில்லை. கடவுளின் வாக்குறுதியைப் பற்றி ஐயப்படவே இல்லை நம்பிக்கையில் அவர் மேலும் வலுப் பெற்றார் கடவுளைப் பெருமைப்படுத்தினார். தாம் வாக்களித்ததைக் கடவுள் செய்ய வல்லவர் என்பதை அவர் உறுதியாய் அறிந்திருந்தார். ஆகவே ”அதை ஆண்டவர் அவருக்கு நீதியாகக் கருதினார்.”

**நற்செய்தி: மத்தேயு 1:16, 18 – 21**

யாக்கோபின் மகன் மரியாவின் கணவர் யோசேப்பு. மரியாவிடம் பிறந்தவரே கிறிஸ்து என்னும் இயேசு. இயேசு கிறிஸ்துவின் பிறப்பையொட்டிய நிகழ்ச்சிகள் அவருடைய தாய் மரியாவுக்கும் யோசேப்புக்கும் திருமண ஒப்பந்தம் செய்யப்பட்டிருந்தது. அவர்கள் கூடி வாழும் முன் மரியா கருவுற்றிருந்தது தெரிய வந்தது. அவர் தூய ஆவியால் கருவுற்றிருந்தார். அவர் கணவர் யோசேப்பு நேர்மையாளர். அவர் மரியாவை இகழ்ச்சிக்கு உள்ளாக்க விரும்பாமல் மறைவாக விலக்கிவிடத் திட்டமிட்டார். அவர் இவ்வாறு சிந்தித்துக் கொண்டிருக்கும்போது ஆண்டவரின் தூதர் அவருக்குக் கனவில் தோன்றி, ”யோசேப்பே, தாவீதின் மகனே, உம்மனைவி மரியாவை ஏற்றுக்கொள்ள அஞ்ச வேண்டாம். ஏனெனில் அவர் கருவுற்றிருப்பது தூய ஆவியால்தான். அவர் ஒரு மகனைப் பெற்றெடுப்பார். அவருக்கு இயேசு எனப் பெயரிடுவீர். ஏனெனில் அவர் தம் மக்களை அவர்களுடைய பாவங்களிலிருந்து மீட்பார்” என்றார்.

**தியானம்:** புதிய ஏற்பாட்டுக்காலத்தின் தந்யைாக இறைவனின் மீட்புத்திட்டத்தின் கருவியாக தேர்ந்தெடுக்கப்பட்ட திருக்குடும்பத் தலைவரான சூசையப்பரின் திருநாளை இன்று திருச்சபை நினைவு கூர்ந்து அவர்வழி நடக்க எம்மை அழைக்கின்றது. தாவீதின் வம்சத்தில் இயேசு பிறப்பார் என்ற இறைவாக்கு நிறைவேறுவதை முதல் வாசகத்தில் காண்கின்றோம். யோசேப்பு சட்ட ரீதியாக இயேசுவின் தந்தையாக வந்ததன் மூலம் இது நிறை வேறுகின்றது. ஆபிரகாமின் வழிமரபினரான யோசேப்பும் கடவுளின் வார்த்தையை அவர் நம்பினார். அவரை நீதிமான் என நற்செய்தி கூறுகின்றது. இரக்கமும் கருணையுமே இறைவனின் நீதி. இவற்றை உணர்ந்தவரான யோசேப்பு மரியாவை தீர்ப்பிடவில்லை. நல்ல குடும்பத்தின் கலங்கரை விளக்காக மிளிர்கின்றார். புனித சூசையப்பர் மரியா மீது கொண்டுள்ள அன்பு, பற்று அல்லது மாண்பை சிதைக்காதிருக்க ஏதுவானவையாக இருந்தன. காட்டிக்கொடுத்தல் என்பது அன்பிற்கு எதிரானது. எமது சுய லாபத்திற்காக இன்பத்திற்காக எத்தனை பேரைக் காட்டிக் கொடுத்து அவர்களது வாழ்வை சிதைத்திருக்கின்றோம்.? நல்ல குடும்பத்தவர்களாக வாழவேண்டிய எம்மில் சிலர் பொறுப்பற்ற தந்தையர்களாக வாழ்ந்துகொணடிருக்கின்றோம். புனிதரின் பெருந்தன்மை, பொறுமை, புரிந்து கொள்ளுதல் எம்வாழ்விலும் மிளிர புனிதர் வழியாக மன்றாடுவோம்.